எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுறும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.

கனவு 11 கற்பனை 3] திருச்சி 15—3—68 [தனிப் பிரதி 25 காசு

சிந்தனை - "தத்துவம்"

"தத்துவம் உணர்ந்துகொள்" என்கிருர்கள். "நீ அதுவாக இருக்கிருய்" என்பது தத்துவம். கம்சனுக்கு கிருஷ்ணனே நினைவாகவும், கிருஷ்ண பயங்கரமே எமனுவும் அவனுக்கு அமைந்தது. நீ எதை நினைக்கிருயோ அதன் வடிவம் அடைகிருய். பெண்ணுசை கொண்ட இராவணன் பெண்ணுல் மடிந்ததும், ராஜ்யத்தில் ஆசைகொண்ட துரியோதனன் ராஜ்யத்தால் மடிந்ததும் இதனை நினைவுறுத்துகிறது. சதா பெண்களைப்பற்றி நினைப்பவன் காமியாகிருன். சதா பணத்தைப்பற்றி நினைப்பவன் லோபியாகிருன். சதா இறைவனை நினைப்பவன் பக்தனுகிருன். வினை விதைத்துவிட்டு தினை அறுக்கமுடியாது. எண்ணங்கள் தூய்மையானுல் இறுதி தூய்மையாக அமையும். எனவேதான் "எண்ணிய முடித்தல் வேண்டும், நல்லவே எண்ணவேண்டும்" என்ருர் பாரதி.

சிலரது பேச்சில் மிருகங்கள் பெயர் கூறி மனிதரிடம் பேசுவார்கள். "சீ கழுதை, போடா! நாயே!" என்று பேசும் இவர்கள், அடுத்த ஜன்மத்தையும் இப்போதே தொடங்கிவிட்டார்கள். என்பதுதான் இவ்வார்த்தைகள் காட்டுகிறது. "யானைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே" என்பது பழமொழி. யானையாகிய பெரியகரிய தீவினை வடிவம் பின்னுல் வரப்போகிறது என்பதை நாக்காகிய மணி காட்டுகிறது. அடிக்கின்ற மணியின் ஓசை எழுப்பும் கருவிக்கு நாக்கு என்று பெயர் வைத்தது தத்துவம் சொல்லுக்குள் பொருளை நம் பெரியவர்கள் செலுத்தியவர்கள். நாம் சொல்லிலிருந்து பொருளை எடுக்கிருேம் என்பது புலனுகும். தன் நண்பர்களைப்பற்றி ஒருவனை பேசவிட்டுப் பார்த்தால் அவனது ஜாதகத்தைக் கணித்துவிடலாம். கைரேகையும் பிறந்த நேரமும் ஒருவனது வாழ்க்கையை, சுக துக்கங்களை குறிப்பிடுவது போலவே அவனது நாக்கும் அவனது வரலாற்று ஒரு முத்திரையாக விளங்குகிறது. நம்முடைய முன்னோர்கள் கொடுமையாக பேசுகின்றவரைப் பார்த்து உன் நாக்கில் சூடு போடவேண்டும் என்று சொல்வது, எவரும் கோபத்தில் சொன்ன வார்த்தையல்ல. பொல்லாங்கு பேசுகின்ற நாக்கை இறைவனது சக்கரத்தால் சுட்டு வல்லானையும் பேசு என்ற தீக்ஷையாகவும் வைத்தார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

எனவேதான் நாக்கை ஞானேந்திரியத்திலும், கர்மேந்திரியத்திலும் சேர்த்தார்கள். மனிதனை ஏற்றுவதும், இறக்குவதற்கும் நாக்காகிய ஏணி பயன்படுத்தப்படுகிறது. கடுஞ்சொல் சொல்கிறவன், வஞ்சகம் பேசுகிறவன் இவர்களைப்பார்த்து உன் நாக்கு அழுகிவிடும் என்று சலிப்பதும் இதனுல்தான்.

நாக்கு நாம்பெற்ற செல்வம். அதனை சரியாக பராமரிக்காவிட்டால் உடன் பிறந்தே நம்மைக் கொன்றுவிடும். நல்ல பாம்பையும், நாக்கையும் பரிசீலித்தோமானுல் நல்லபாம்பைவிட நாக்கே கொடியது என்பது புலனுகும்.

"எண்ணமே செயல்" எதை எண்ணுகிருயே அதுவாக நீ ஆகிருய் என்பதுதான் தத்துவ தரிசனமாக விளங்குகிறது.

ரெட்டியார்.

குறத்தி

(தமிழ்ச்செழியன்)

மானிடத்தில் விழிகள் பெற்று
மயிலிடத்தில் நடனம் கற்றுத்
தேனிடத்தில் இனிமை பெற்ற பேச்சினள்—அவள்
தெரிந்தெடுத்த கெண்டை ரெண்டின் வீச்சினள்.

பூவெடுத்துக் குழலி லிட்டுப்
பொட்டெடுத்து நுதலி லிட்டுப்
பாவெடுத்துக் குறியு ரைக்க வந்தவள்—அவள்
பாடிநிற்கும் நாவி னிக்கும் சிந்தவள்.

கூட மொன்றில் பாய லிட்டுக்
கோலே யங்கே ஆட விட்டுப்
பாட மொன்று சொல்லு கின்ற பாங்கிலே—அவள்
பாடினுள்தன் பாடலுந்தெம் மாங்கிலே.

வேடனுக்கு மருகன் அந்த
வேலனுக்கு மலேகொ டுத்த
பாடலேத்தும் சொல்லில் இட்டுக் காட்டினுள்—அவள்
பாகெனத்தன் குரலில் இட்டுச் சாற்றினுள்.

தனித்திருக்கும் மங்கை நெஞ்சம்
தவித்திருக்கும் வேளை தன்னில்
இனித்திருக்கும் சேதி சொல்லித் தேற்றினுள்—அவள்
ஏற்றநெல்லே வாங்கிக் கம்பி நீட்டினுள்.

தாயிருக்கத் தமிழி ருக்கத்
தரணிமெச்சும் குரலி ருக்க
வாயிருக்கும் காலம் முற்றும் பாடுவாள்—அவள்
வயிறிருக்கும் காலம் முற்றும் வாடுவாள்.

————

கண்ணன் திருமுகம்

(இளங்கம்பன்)

எடுப்பு

கண்ணன் திருமுகத்தைக் கண்டேனம்மா!—அந்தக்
கணத்தில் அனைத்தையும்நான் மறந்தேனம்மா! (கண்)

மேலெடுப்பு

எண்ண எண்ண அது இனிக்குதம்மா—என்
இதய தாகமதைத் தணிக்குதம்மா. (கண்)

முடிப்பு

வண்ண மலர்க்கண்கள் வாசத் தாமரையோ?
வடிக்கும் அவன்கீதம் வானத் தமுதமோ!
உண்ணும் கனியோ? அவன் உவர்வாய் இதழ்கள்
உரைக்கும் ஒன்றே அவன்! ஒளிமுக அழகே. (கண்)

கவிதை விளக்கம்

(டி. எஸ். சுப்பராமன்)

உணர்ச்சியில் ஊறிப் பிறக்கும்—அதுநல்
ஒலியினில் ஆடிச் சிறக்கும்—சொற்
புணர்ச்சியிற் பூத்துச் சிரிக்கும்—எனில்
பொருளெனு மாடை யுடுக்கும்.

கற்பனை வானிற் பறக்கும்—அதுநற்
காவியத் தேனில் இனிக்கும்—நிதம்
கற்பவர் நெஞ்சைப் பிணிக்கும்—நின்று
காலனையு மேறி மிதிக்கும்.

பாரினைச் சுற்றிக் களிக்கும்—அங்குப்
பார்த்ததைச் சொல்லில் வடிக்கும்—உண்மைத்
தேரினில் ஏறி நடக்கும்—எனில்
தெய்வத்தே போலே நிலைக்கும்.

ஊரையே மாற்றி முடிக்கும்—அது
உயர்ந்ததைச் சொல்லிக் கிடக்கும்—தமிழ்ச்
சீரை யணிய மயக்கம்—இது
சேரும் கவிதை விளக்கம்.

————

அலைக்கழியும் உணர்வினிலே..!

(திருச்சி பரதன்)

அன்புருவே அருளுணர்வே
உனைநாடா தென்றும்
அலைக்கழியும் உணர்வினிலே
எனைமிதக்க விட்டேன்
தன்வளர்ச்சி தனதுசுகம்
பெரிதென்று யெண்ணி
தவறுகளைப் பெருமைகளாய்
உணரத்தலைப் பட்டேன்
பண்மையிலே ஒருமைதனை
பகுத்தறியும் பண்பை
பழகாது வளராது
சிறுமைக்குட் பட்டேன்
இந்நிலையின் பனியகற்றும்
சுடரொன்று கண்டேன்
எழில்திருவே ரகப்பெரும!
உனதுவிழிப் பட்டேன்!

————

எழுத்தாளன்

கனவு 11] பிலவங்க, பங்குனி (15-3-68) [கற்பனை 3

ஏமனா? காமனா?

பொது வாழ்க்கை, தனி மனித வாழ்க்கை எதிலும் எதிர்ப்பு இல்லாதநிலை இன்று இல்லை. எதுவானால் என்ன? எவரானாலும் சரி, நாம் எதிர்த்துத்தான் பேசவேண்டும் என்ற மனோபாவம் வளர்ந்து வருகிறது. இது ஜனநாயகம். கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் உண்டு என்று பேசலாம். பூமியில் பிறந்த அனைவரும் அறிவு, அனுபவம் பெறுவதில் ஒரு நிறை பெற்றவர்களாய் இல்லாமல் இருப்பதுதான் அடிப்படையில் ஏற்பட்ட குழப்பம். அறிவும் அனுபவமும் சூரிய ஒளியைப்போல அனைவருக்கும் சமமாக கிடைக்குமானால் வாதிட்டு வழக்காட எவரும் முன்வர மாட்டார்கள்.

பொது வாழ்க்கையிலும் சரி தனி மனித வாழ்க்கையிலும் சரி பொதுநெறி ஒன்று இருக்கிறது. அதனை மறந்துவிடுவதால் குழப்பங்கள் ஏற்படுகின்றன. இறைவா என் எதிரிகளிடமிருந்து, அவர்கள் செய்யும் எதிர்ப்புக்களிலிருந்து என்னை நானே பாதுகாத்துக்கொள்ள முடியும். ஆனால் என்னுடனே கூடி மகிழும் நண்பர்களிடமிருந்து என்னை நீதான் காப்பாற்ற வேண்டும், என்று ஒரு அறிஞன் அலறினான். இதனை சற்று சிந்தித்தால் நமக்கு ஏற்படும் பெரும்பாலானதொல்லைகளுக்கு, கவலைகளுக்கு நமது நண்பர்களே காரணம் என்பது புலப்படும்.

வாழ்க்கையில் இன்பம் தருபவன் காமன் என்றும், மரணத்தைத் தருபவன் ஏமன் என்றும் சொல்லுகிறோம். காமனை நேசிக்கின்றோம்; ஏமனை வெறுத்து ஒதுக்கின்றோம். காமனது செய்கை நமக்கு உற்சாகம் தருவதாக இன்பம் தருவதாக இருக்கிறது. ஏமனின் நினைவு நமக்கு அச்சத்தைத் தருகிறது. நம்மைச் சார்ந்தோரும் ஏமனைப் பற்றி பேசினால் பயப்படுவதோடு மட்டுமல்ல, அழவும் செய்கிறார்கள்.

ஏமன் என்ற கருத்து உண்மையோ பொய்யோ, ஆனால் அந்த நினைவு நம்மை நேர்வழியில் நடத்தும் ஆசானாகவும், நீண்டநாள் வாழவும், திடமாக வாழவும், உயர்ந்த லட்சியங்களோடு வாழவும் உதவுகிறது. சுருக்கமாகச் சொன்னால் ஏமன் என்பவன் லோக குருவாக இருந்து மனிதர்களை நல்வழியில் நடத்துகிறான் என்பதும், அவனை நேசிப்பதைவிட்டு, உதவி செய்த அவனை உலகம் தூற்றுகிறது என்பதும், நம் உடலிலே அதிலும் மனதிலே பிறந்து மனதையே தின்று நம்மை அடியோடு நாசமாக்குவது நம்மால் விரும்பப்படுகின்ற காமம் என்பதும் சிந்தித்தால் புரியும்.

நண்பர்களை பெறும்போது அவர் நமக்கு ஏமனா? அல்லது காமனா? என்பதை அறிந்து அதற்குத் தக்கபடி நாம் வாழவேண்டியிருக்கிறது. தனி மனித வாழ்வில் மட்டுமல்ல, பொது வாழ்க்கையிலும் இதுதான் அனுபவ உண்மையாக இருக்கிறது. எதிர் கட்சியில் இருப்பவர்களை நம்பலாம். அவர்கள் நாம் எது பேசினாலும் செய்தாலும் குற்றம் கண்டுபிடித்து சொல்வார்கள். எதிரியாக இருப்பவர்கள் இதில் குற்றம் கண்டுபிடிப்பார்களென்று நாமும் எச்சரிக்கையோடும் புத்திசாலித்தனத்தோடும் செயல்படுவோம். ஒரே கட்சியில் இருந்துகொண்டு, உற்றது கூறுவதுபோல கூறி நமக்கு இதம்புரிவதுபோல பேசி, சமயம்வந்தால் நம்மையே காலைவாரிவிட்டு நம்முடைய அழிவின்மீது, தன் புகழ் கொடி நாட்டும் சந்தர்ப்பவாதிகள் நம்முடன் இருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அரசியல் தலைவரோடு நெருங்கி இருப்பதுபோல காட்டிக்கொண்டு அதன்மூலம் தன் தேவைகளை பூர்த்திசெய்து பெரிய மனிதர்களாக விளங்குபவர்கள் எந்தக் காலத்திலும் இருந்து வந்தாலும் இப்பொழுது கொஞ்சம் அதிகம் என்று காட்டுகிறது நடைமுறைப்போக்கு.

ஹிந்திமொழியை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று பேசப்பட்டபோது எதிர்ப்பே இல்லை. ஹிந்திக்காரர்களைவிட ஹிந்தியை தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் தான் ஹிந்தியைப் பரப்பவும், அது ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தியும் வந்தார்கள்.

ஹிந்தி ஆட்சிமொழியாக செய்ய சட்டத்தின்மூலம் இடம்பெற்றதும் ஹிந்தியை தாய்மொழியாக கொண்டவர்கள் காட்டிய வெறியும், ஆர்ப்பாட்டமும்தான் அதனை எல்லா மக்களும் ஆங்காங்கு எதிர்க்கும் நிலை ஏற்பட வழி செய்துவிட்டது. உற்சாகத்தாலும் பிடிவாதத்தாலும் பேசிய முரட்டு பேச்சுகளாலும் ஹிந்தியை எதிர்த்தவர்களைவிட, ஹிந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஒழித்துக்கட்டிவிட்டார்கள் என்பதை தெளிவாக சொல்ல முடியும்.

எனவே இந்த நிலையில் எதிர்கட்சிகளை அலட்சியப் படுத்துவதோ அடக்கப் பார்ப்பதோ தன் அழிவுக்குக் காரணமாகவே அமையும் என்பதை மறந்துவிடக்கூடாது. எதிர்கட்சியாக இருக்க எவருக்குமே திறமை இல்லை என்று மிதப்போடு இருந்த காங்கிரஸ் தமிழகத்தில் தக்க பாடம் கற்றதை எவரும் மறந்துவிடக் கூடாது.

வளமான எதிர்ப்பை வளர்த்து நம்மை தூய்மையாளர்களாக காட்டிக்கொள்ள நேர்வழியில் நடத்திச் செல்லுகின்ற பொறுப்பை அவர்களிடம் விட்டுவிட்டு, தன் சொந்தக் கட்சிக்காரர்களிடமும், அனுதாபிகளிடமும், தொண்டர்களிடமும் சர்வசாக்கிரதையாக எந்த தனி மனிதன் இருக்கிறானோ அவனே இனி அரசியலிலும், தனிவாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் வெற்றியும், புகழும்பெற முடியும்.

நண்பர்களை அளவிடும்போது ஏமனா? காமனா? என்று இனம்கண்டு, அதற்கு ஏற்ப எச்சரிக்கையுடன் இருப்பது பொதுவாழ்வுக்கு இன்று மிக மிக தேவையானதாக இருக்கிறது என்பதை நாம் தெளிவாக குறிப்பிட்டுவிட விரும்புகிறோம். சிந்தித்துப் பாருங்கள் அல்லது சற்றுப் பொறுத்திருந்து பாருங்கள்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

எட்டயபுரம் கவிஞர்களும் கலைஞர்களும்

4. நாகூர் முத்துப்புலவர்

(கி. முத்துராமகிருஷ்ணன்.)

எட்டயபுரம் அரசசபையில் கடிகை முத்துப்புலவர் வாழ்ந்த காலத்திலேயே நாகூர் முத்துப்புலவரும் இருந்தவர். இருவரும் இணைபிரியாத நண்பர்கள். தமிழில் வல்லவர்கள். ஒரு சமயம் இருவருமே எட்டயபுரத்தை விட்டு வெளியூர் சென்றுவரப் புறப்பட்டனர்.

எட்டயபுரத்தில் உமறுப் புலவரும், பெத்தணன் தளவாய் என்ற கவிஞரும் இன்னும் சிலரும் இருந்தனர். கடிகையார் ஏழாயிரம் பண்ணைக்குச் சென்ருர். நாகூர் முத்துப்புலவர் ராமநாதபுரம் சென்ருர்.

ராமநாதபுரம் மன்னர்கள் தமிழ்க் காவலர்கள். நல்ல பாவலர்கள். அதற்கு மேலாக சேது காவலர்களுமாகும். அவர்கள் தமிழை, புலவரை, கவிஞரை வளர்த்தனர். எட்டயபுரத்திற்கும் ராமநாதபுரத்திற்கும் இணைப்புபாலமாக இருந்தது தமிழ்தான்.

நாகூர் முத்துப்புலவர் நல்ல தமிழ் அறிஞர். அடக்கமானவர். இவரை இன்றும்கூட சிலர் இவரது இயற்பெயரை வைத்து முகமதியக் கவிஞர் என்று கூறுவதை நான் காதாரக்கேட்டிருக்கிறேன் இந்து மதத்தில் ஆழ்ந்த அறிவுகொண்ட இந்துமதக் கவிஞர் இவர். இவரது சந்ததியாரில் ஒருவர் அவர் பெயராலே இங்கு இன்றும் வாழ்ந்துவருகிருர். அவரும் சில நாட்கள் வரை எட்டயபுர அரசசபை புலவராகவும் இருந்தார்.

நாகூர் முத்துப் புலவர் ராமநாதபுரம் சென்ற சமயம் அங்கு அதிமதுரக் கவிராயர் என்பவரைக் காணச் சென்ருர். இவர் தன் கல்வியினுல் அதிகக் கர்வமும் அதிகமாக ஆணவமும் உள்ளவர்.

நாகூர் முத்துப்புலவர் அவர்கள் அதிமதுரத்தைக் கண்டார். வணக்கம் கூறினர். முகமன் விசாரித்துக் கொண்டனர், அதிமதுரக் கவிராயர், புலவரை நோக்கி தங்கள் திருநாமம் யாது என்ருர். புலவர் முத்து என்ருர். அதற்குக் கவிராயர் வெள்ளையா என்ருர் இவர் சாதாப் புலவர் என்ற தன்மையில். கவிராயரைப் புலவர் தங்கள் திருப்பெயர் சாற்றலாமோ என்ருர். அதற்குத் தன் பெயரை அதிமதுரக் கவிராயர் என்று அகங்காரமாகப் பதில் கூறினர்.

ஓகோ கடைச்சரக்கோ என்று புலவர் கூறியதும் கவிராயர் திடுக்கிட்டு பேச்சைச் சுருக்கினுர்.

தங்கள் ஊர் எது என்ருர் கவிராயர். எனது ஊர் இரு நான்கு தந்தைபுரம் என்ருர். ராயர் விபரம் புரியாமல் திகைத்தார். புலவர் சிரித்துக் கொண்டே எட்டயபுரம் என்று கூறியதும் மகிழ்ச்சி அடைந்தார்.

மன்னரைப்பற்றிய பேச்சு வந்தது, ராமநாதபுரம் மன்னர் சேதுபதி என்ருர். மகிழ்ச்சி, அணைக்காவலன், கல்விக் காவலன் என்ருர். இப்படியே கவிராயர் அடுக்கிக்கொண்டே சென்ருர். கவிராயரே சற்றே எங்கள் மன்னரைப்பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள் என்ருர் புலவர்.

உங்கள் மன்னர் சேதுக்குமட்டும் பதி. எங்கள் மன்னர் பலவற்றிற்குப் பதி கல்விக்கு களஞ்சியம். அங்கு யான் ஒரு சாமான்யன். தங்கள் மன்னரே என்னை எதிர்கொண்டு அழைத்துச் செல்லவேண்டும் என்று பாடினுர்.

கனமகிமை பெற்றுவளர் பஞ்சஎட்சண மதுரக்
காவியக் கடல்கள் யாவும்
கரைகண்ட கடிகைங் களஞ்சிய ங்கள்நூறுண்டு
கவிராயர் ஆயிரம்பேர் எனதுநரமானபேர்
இரண்டாயிரம்
எட்டயபுரந்திருந்து என்றும் துதிக்கும்வளர்
சந்திர கிரியாபதி
இளசையம் பதிஅதிபதி, மனுநீதிபதி,
மண்டலாதிபதி
குமாரஎட்ட மகுடபதி வாசல் வித்துவான்
மதுரத்தமிழ் அட்டாவ தானியாய் உன்மீது
வண்ணமிது பாடிவந்தேன்
தனதனன வரிசையது ராசன்சகோதரா
திருராம சாமிவேந்தே சதுர்வந்து காண்பதற்கு
எதிர்வந்து வந்தழைத்திட தயைசெய்
தருள்புரிவையே.

இக் கவியைக்கேட்ட கவிராயர் அப்படியே புலவரை மெய்தழுவிக்கொண்டார். இருவரும் சேதுபதியைக்கண்டு சல்லாபித்துவிட்டு இல்லம் திரும்பினர். கவிராயருக்கு எப்படியும் புலவரை மடக்கிவிட வேண்டும் என்ற எண்ணம்.

அரண்மனை வாயிலைக்கடந்து இருவரும் வருகிருர்கள். வாசல் பக்கத்தின் ஒரு ஓரத்தில் கழிவுநீர்விழும் தொட்டி ஒன்றுஉள்ளது. அதனைப் பார்த்த கவிராயர் புலவரை ஏறிட்டுப் பார்க்கிருர். தன்னை நீர் விழும் தொட்டி என்பதனை சொல்லாமல் கேலி செய்கிருர் என்று புரிந்த புலவர் கவிராயரே அது 'நீர் விழும் தொட்டி' என்று சிலேடையாகக் கூறவே கவிராயர் அடங்கி விட்டார். பின்னர் சிறிது நாட்கள் ராமநாதபுரத்தில் தங்கிவிட்டு எட்டயபுரம் திரும்பினுர்.

அதே சமயம் கடிகை முத்துப்புலவர் அவர்களும் ஏழாயிரம் பண்ணை, ஊத்துமலை, சிவகிரி முதலிய இடங்களுக்குச் சென்று அன்று பருவபதம் முதலியன பாடி எட்டயபுரம் திரும்பினுர்.

இருவரும் எட்டயபுரம் மன்னர் சபைக்குச் செல்கிருர்கள். அங்கு உமறுவைக் காணேம். பெத்தணன் தளவாயைக் காணேம். யாரோ பலர் வீணுக பேசிக் காலம் கடத்தி வந்திருக்கின்றனர். இதனைக் கண்ட நாகூர் முத்து மனம் நொந்தார். வாடினுர். ஆனுல் கடிகையார் பாடலாகவே சாடினுர்.

சிங்கம் இருந்து ஜெயஸ்தம் நாட்டுகின்ற
சங்கம் எனும் எட்டபுரந்தனில் — எட்டா
குமார எட்டாயான் இல்லாதது பயல்கள்
இட்டது சட்டமாகி விட்டதே.

கடிகையார் பாடல் கேட்ட மன்னரும் மிக்க மகிழ்ச்சி கொண்டார். கடிகையாரை அழைத்து தக்க மரியாதை செய்து அனுப்பினுர்.

சில நாளில் கடிகையார் நோய் வாய்ப்பட்டார். உமர் ஊரில் இல்லை. நாகூர் முத்துப்புலவர் இல்லை தன் நிலையை மன்னருக்கு எடுத்துக் கூற வேண்டும். தக்க ஆள் கிடைக்கவில்லை. பின்னர் நினைவுவந்தது சோலை அழகனைப் பற்றி. இவர் மன்னரின் அடைப்பக்காரர். நல்ல தமிழ் அறிவு மிக்கவர். அவரை அழைத்து வரச் சொல்லி கடிகையார் பின்வரும் பாடலை பாடினுர்.

மாலை அழகா மதிபோல் முகத்தழகா
சோலை அழகா இனிய சொல்லழகா-மூலையிலே
நானிருந்து வாடுகிறேன் நம்கோன் குமாரஎட்ட
தானிகருக்கு நீதனித்துச் சாற்று.

பாட்டை எடுத்துச் சென்ற சோலை அழகர் மாலையில் மன்னரைக் கண்டு விவரம் கூறினுர். கடிகையார் உதவி பெற்று வாழ்ந்தார்.

பின்பு நாகூர் முத்துப்புலவர் கடிகையாரைக் கண்டு பேசினுர். கடிகையார் இறந்த பின்பு நாகூர்முத்து பல ஆண்டுகள் மன்னர் சபையில் புலவராகத் திகழ்ந்தார். உமறுப் புலவர் சீருப்புராணம் இயற்றி அரங்கேற்றிய பின் எட்டயபுரம் வந்தார். கடிகையார் மறைவு கேட்டு துக்கம் கொண்டார்.

நாகூர் முத்துவும் உமறும் எட்டயபுரத்தில் இருந்தனர். நாகூர் முத்துப் புலவருக்கு பின்பும் பல புலவர்கள் எட்டயபுரம் மன்னரிடம் இருந்தனர் அவர்களது வரிசை இனித் தொடரும்.

பயம்-பக்தி-பரவசம்

நா. சேதுராம்

★

ஒரு குழந்தை விஷமம் செய்கிறது. தாய் அதட்டுகிறாள். தாயிடம் பயம் பிறக்கிறது. அதே தாய், அப்பா வந்து விட்டார், உதை விழும் என்றவுடன், தகப்பனிடம் குழந்தைக்குப் பயம். அப்பா வரும் ஒவ்வொரு தடவையும் பயம் வருகிறது. தாயிடம் அச் சமயம் பயம் தெளிகிறது. அதே போல் குழந்தை தெய்வ சந்நிதானத்தில் விஷமத்தனம் செய்தால், சுவாமி கண்ணைக் குத்தும், சுவாமி பயம் உறுத்தும் என்று கடவுளின் ரூபத்தைக் காட்டி பயம் உண்டாக்குகிறாள். உடனே ஹரஹர என்று கன்னத்தில் போட்டுக்கொள், தோப்புக்கரணம் போடு, சுவாமி பஹவானே இனிமேல் இப்படிச் செய்யவில்லை என்று சொல் என்று சுவாமியிடம் மன்னிப்புக் கேட்கச் சொல்லுகிறாள். தன் குழந்தை கடவுளிடம் அன்புகொண்டு, மனம் தெளிந்து பிற்காலத்தில் தர்மம் தவறாது நடக்க அன்னைக்கு ஆசை. மருந்துகொடுக்க வியாதிதீரும். ஆகையால் குழந்தைக்கு வலுக்கட்டாயமாக அடித்தாகிலும் மருந்து புகட்டுவது போல், பிற்காலத்தில் உலக நடவடிக்கைகளினால் குழந்தையின் மனதில் புல்லுருவிகள் முளைக்காவண்ணம், பயத்தைப் புகுத்தி கடவுளிடம் பக்தி உண்டாகும் சூழ்நிலை ஏற்படுத்தி வருமுன் காக்கிறாள். குழந்தைப் பருவத்தில் அதன் மனநிலையை, பெரியோர்கள் மாற்றியமைக்கும் விதம் எப்படியோ அப்படியே குழந்தை பெரியவனானதும் அவன் எண்ணங்கள் அமைகின்றன. எத்துணை விவேகம் கொண்டாலும் தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்தான்; மாறாது.

பயத்தினாலேயே பக்திமுளைக்கிறது. பக்தி முளைக்க மூலகாரணம், பக்தி கொள்ளும் பொருள் நம்மைவிட உன்னதமானது, உயர்வானது, அதன் வழி நாம் செல்லவேண்டும், அல்லாவிடில் நாம் மீளாத்துயர் கொள்வோம் என்னும் பயமே. கடவுளின் வலிமையில் நம்பிக்கை கொண்டால், குருவின் அறிவில் நாம் அடங்கினால், தாய், தகப்பனின் ஆற்றலில் நாம் மயங்கினால் பக்தி உண்டாகும். நம் ஆற்றல் ஒருசிறு விழுதுதான் என்று உணர்ந்தால் பக்தி விளையும்.

பெற்றோர்களிடம் பக்தி விபரம் தெரியும் நாளிலிருந்து உண்டாகிறது. தாய் கவனிக்காவிடில் நமக்கு பால் கிடையாது, பசி நம்மை சாப்பிட்டுவிடும் என்ற மூலஉணர்ச்சி; நாம் தொழும் தாயே, தன் கணவனைத் தொழுது நிற்கும் காட்சியில் தாயினும் மேம்பட்ட தகப்பனை நாமும் வழிபடவேண்டும் என்ற அனுசரிப்பு, இவைகள்தான் காரணம்.

கல்விகற்கும் காலத்து நாமறியாத நுண்ணிய கல்வித்திறன் குருவினிடத்தும் ஏனைய அறிவாளிகளிடத்தும் கண்டு அவர்களிடம் பக்தி ஊற்று எடுக்கிறது. கல்வி கற்று தெளிந்தபின் ஆய்ந்தறிந்து உலகுக்கெல்லாம் மூலப்பொருளைக் கண்டு நாமும் அதனுடன் ஒன்றி அதன் தன்மையையே பெற்று, பாலுடன் நீர்கலந்தன்ன நம் பிறவிப்பயன் எய்த முற்படும் காலத்தில் கடவுளின்பால் பக்தியும் அவன் குண நலன், உருவ அமைப்பு, செயல் திறன் இவைகளை அறிய ஆவலுள்ளவர்களாவோம்.

வயது ஏற ஏற, அறிவு வளர வளர பயம் தெளிந்து பக்தியாக மாறவேண்டும். பயம் தெளிந்து, அலக்ஷ்யமும், அஹம்பாவமும்வரின் திரிந்தபால் ஒக்கும். அவ்வாறாயின் உய்யவழி இல்லை.

பயம், பக்தியாக மாறிவிட்டால், மனலயம் ஏற்படுகிறது. மனலயம் தவறின் பக்தி, பித்தாக மாறும். பக்தியே முற்றினால் பித்து போல் தோன்றிடும். நாம் படித்துள்ள புராணங்களில் பல இடங்களில் பக்தியின் தத்துவமும் பக்திகொண்டவர்களின் வைராக்கியமும் நாம் உணரும் வகையில் கூறியுள்ளனர். அர்ச்சுனன் கொண்டுள்ள குருபக்தியைவிட ஏகலைவன் கொண்டுள்ளது சிறந்ததா? பரதன் கொண்டுள்ள சகோதர பாசம், பக்தி இவைகள் இலக்குவனைக் காட்டிலும் சிறந்ததா? ஹனுமானைவிட பக்தியிற் சிறந்தவர் உண்டா? சபரி, விபீஷணன், குகன், சுக்ரீவன் இவர்களும், குந்தி, திரௌபதை, நந்தகோகுலத்தவர்கள், விதுரர், அக்ரூரர் போன்றவர்களும் கொண்ட பக்தியை ஆராய்ந்து நாமே நம்மை விளக்கிக் கொண்டால்தான், நாம் அனுபவிக்கலாம்.

பிற்காலத்து நாயன்மார்கள், ஆழ்வார்கள், சங்கர, ராமானுஜ, மாத்வாச்சாரியர்கள், ராமகிருஷ்ணர்போன்ற நவீனகாலத்தவர்கள் இவர்களின் தன்மையை நாம் கவனிக்கவேண்டும். மஹாபாரதத்தில் கிருஷ்ணனை சகாதேவன் தன் பக்திப் பெருக்கால் தன் ஹிருதய கமலத்தில் இருத்தி, கட்டி, கிருஷ்ணன் வேறு பக்கம் செல்லக் கூடாதவாறு செய்தான். பக்திக்கு அவ்வளவு சக்தி உண்டு. கடவுளும் பக்தியாம் அக்னியில் வெண்ணை போல் உருகி இரும்பு காந்தத்தினால் கவரப்படுவதுபோல் பக்தியால் கவரப்படுகிறான். கடவுளைக் காணவேண்டியும், கண்டபின் அவனைப் பிடிதளராது சிக்கெனப் பிடித்துக்கொள்ள வேண்டியும் மனிதன் குரங்குக் குட்டியின் தன்மையினைக் கொள்ள வேண்டும். குரங்குக்குட்டி தாயின் வயிற்றுடன் ஒட்டிக்கொண்டு தாய்க் குரங்கு எங்கு தாவினும் விடாது வலுவாகப் பிடித்துக்கொண்டு இருப்பது போல் பிடிதளராது மனம் அயராது இருக்கவேண்டும். இது பற்றியே தாயுமானவர் தன்பிடித்த பத்தில் "புறம் புறம் திரிந்த செல்வமே, சிவபெருமானே யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினிநீயே" என்றார்.

சில பக்தர்கள் விஷயத்தில் கடவுளே நேரில் வந்து தடுத்தாட்கொண்டார். வன்தொண்டன் சுந்தரனார் பொருட்டு கடவுள் பட்டபாடு புராணவரலாறாகும். இது பூனைக்குட்டி தன்மையினது ஆகும். பூனைக்குட்டியைக் காக்கும் பொறுப்பு தாய்ப் பூனைக்கே. தன் குட்டிகளை வாயில் கவ்விக்கொண்டு இடம் இடமாக பந்தோபஸ்து செய்கிறது தாய்ப்பூனை. பூனைக்குட்டிக்கு குரங்குக் குட்டி போல் பொறுப்பு இல்லை. தாய்ப் பூனைக்குத்தான் கவலையும் பொறுப்பும்.

பக்தி ப்ரவாஹம் பெருகப்பெருக, தன் வசமிழந்து, பரவசம் கொள்வது சகஜம். பரவசம் என்பது கடவுளுடன் ஒன்றுவது, புகழ்பாடுவது, மெய்ம்மயிர் பொடிப்ப கண்ணீர்சோர, கைகால்கள் உதற, நாக்குழற, உள்ளுணர்வு விம்ம நெஞ்சுருகி, மனம்லயித்து நிற்றலினால் பரவசம் அறியப்படுகிறது. பரவசத்தில் நிற்பவர்கள் தாங்களே கடவுளாகி கடவுளே அவர்கள் ரூபமாகி ஒன்றிவிடுவார்கள். கடவுள் ரூபத்தை அச்சமயமே தர்சிப்பார்கள். நாராயணன் நம்பூத்திரி கிருஷ்ணனை "திவ்யமான ஒரு தேஜஸ், அதன் நடுவே மிக அழகான குழந்தை வடிவு, யாராயினும் ஆசைப்படத்தகுந்த யௌவன ஆரம்பத்தின் அழகு" என்று பலவாறாயினும் பாடிப்பாடி அமிர்தஸாகரத்தில் மூழ்குகிறார். இதேபோல் குலசேகராழ்வார் முகுந்த மாலையில் தன் பரவசநிலையை உணர்த்துகிறார்.

ஸௌந்தர்ய லஹரியில் ஆதிசங்கரர் பரவசத்தை மிக அழகாக விளக்குகிறார்.

...பா ஜல்ப: சில்பம் ஸகலமபி முத்ரா விரசநா
...தி: ப்ராதக்ஷின் யக்ரமணம் ஆசநாத்யா
[ஹ்ருதிவிதி:
...ராணும: ஸம்வேச: ஸுகமகிலம்
[ஆத்மார்ப்பண த்ருசா
...பர்யா பர்யா யஸ்நவ பவது யந்மே
[விலஸிதம்.

"எனது உடல், உயிர், ஆவி எல்லாவற்றையும் உன்னிடத்தில் அர்ப்பணம் செய்துவிட்டு உன்னுடைய ஸ்வரூபமாகவே நான் ஆகிறேன் என்ற ஞான மஹிமையினால் லோக விஷயமாக பேசும் வியவஹாரங்கள் எல்லாம் உன்னுடைய மஹாமந்த்ர ஜபமாகவும், கை, கால்களின் அசைவுச் சேஷ்டைகள் எல்லாம் உன்னுடைய வழிபாட்டுக்கு அவசியமான முத்திரைகளாகவும், என் நடையாவது உனக்கு நான் செய்யும் பிரதக்ஷிணமாகவும், நான் சாப்பிடும் அன்னம், பானம் இவைகள் உன் நைவேத்தியமாகவும், நான் படுப்பது உனக்கு செய்யும் நமஸ்காரமாகவும், இவ்விதமான லோகாயதமாக நான் செய்யும் செய்கைகள் எல்லாம் உன்னுடைய பூஜையை முன்னிட்டு நான் செய்யும் வந்தனுதிகளாக ஆகட்டும்" என்கிறுர்.

ஊன்றிக் கவனித்தால் கடவுளின் ஸ்வரூபமாகவே ஆகவேண்டும் எனில் தன்வயமிழந்து பரவசநிலை எய்த வேண்டும். அதாவது நாக்கு கடவுளின் நாமாவளி, ஸ்தோத்திரங்கள்மட்டிலும்தான் பேசும்நிலை எய்தி மற்ற விவகாரங்கள் பேசும் சமயம் ஊமையாக ஆகவேண்டும். கை, கால்கள் கடவுளின் பூஜை முதலியன செய்து வழிபாட்டுக்காகத்தான் அசையவேண்டும், மற்றைய வியவஹாரங்களில் முடமாக இருக்க வேண்டும். கால்கள் நடக்க ஆரம்பித்தால் அது கடவுளுக்கு நாம் செய்யும் பிரதக்ஷிணத்தைக் காரணமாகவே நடக்கவேண்டும்; அல்லாவிடில் நொண்டியாகவே இருக்கவேண்டும். உடலின் உள் இருக்கும் ஜீவாத்ம, பரமாத்ம திருப்திக்கும் கடவுளின் நிவேதனத்திற்கும்தான் அன்னம், பானம் இவைகள் நாம் கொள்ள வேண்டுமே அல்லாமல் ஊன் வளர்ச்சிக்காக அல்ல. நம் உடல் ஈஸ்வரனுக்கு நாம் செய்யும் நமஸ்காரத்தை உத்தேசித்துத்தான் கீழே படுக்க வேண்டும்; உடலின் சிரமபரிஹாரத்தை உத்தேசித்து படுக்கக் கூடாது என்று பலவிதத்தில் பரவச நிலை எய்தியவரின் காரணகாரியங்களை பகவத்பாதாள் விளக்குவது நமக்குபுரியும்.

துருவன், வான்மீகி, சுகப்ரம்ஹரிஷி ஆகியோரின் பரவசநிலை நாம் வெகுவாக படித்து ஆனந்தப்பட்டிருக்கிறோம். அருணகிரிநாதர் குமரக் கடவுளை நேரில் தர்சித்த திறனும், மணிவாசகப் பெருமான், அரனிடம் அருள் வேண்டி நின்ற சமயமும், ராமகிருஷ்ண பரமஹம்சர் காளிதேவியினிடம் லயித்த முறையும், மீராபாய், ராமதாஸர், புரந்திரர், கபீர் ஆகியோரின் வாழ்க்கைக் குறிக்கோள்களும் நம்மை ஒவ்வொரு நிமிஷமும் இறைவன்பால் ஊக்குவிக்கின்றன. சிறு பிள்ளைப் பிராயத்தில் பயம் தோன்றி பிறகு விபரமறிந்தபோது பக்தியாக மாறி அதே பரவச நிலைக்கு வழிகோலுவதுதான் பிரம்மவித்தையாகும். பரவசமாகி கடவுளுடன் ஒன்றியவர்தான், அஹம்பிரஹ்மாஸ்மி, தத்துவமஸி, அயமாத்மா பிரஹ்மா, பிரக்ஞானம் பிரம்மா என்பதன் பொருளை உணர்ந்தவர்கள் ஆவர். அதுவே முக்தியாகும்.

சுபம்.

மாரியும் ஏரியும்

(கவிஞர் தமிழ்முடி)

மாரியைப் போன்றவர் தலைவர்
ஏரியைப் போன்றவர் மக்கள்!

எந்தத் தலைவரும் பூமியுள்ள மட்டும்
இறவாமல் உயிரோடு வாழ்வ தில்லை!
சந்தத மாகவே பூமியுள்ள மட்டும்
சாகாமல் வாழ்பவர் மக்களே தாம்!

மாரியைப் போன்றவர்......

தலைவர்கள் வாய்ப்பதும் சேவைகள் செய்வதும்
தரணிக்கு வான்மழை பெய்வது போல்!
சிலமணி நேரத்தில் வான்மழை ஓய்ந்திடும்
தேக்கி அணைகட்டில் பல்லாண்டு வாழ்ந்திடும்!

மாரியைப் போன்றவர்......

தேசத் தலைவர்கள் வாழ்க்கையும் சேவையும்
சிறிது காலத்திலே ஓய்ந்து விடும்!
தேசத் தலைவரின் கொள்கையை மக்களே
தேசம் உள்ளமட்டும் காக்க வல்லார்!

மாரியைப் போன்றவர்.. ...

கொஞ்சநாள் வாழ்ந்த தலைவரின் கொள்கையைக்
கோடி காலம்வரை தேக்கி வைத்து
நெஞ்சப் பயிருக்குப் பாயச்சி வளர்த்திடும்
நீர்த்தேக்கம் போன்றவர் மக்களேதாம்!

மாரியைப் போன்றவர்......

விதையை விதைப்பவர் தலைவரென்றுல்
விவசாயம் செய்பவர் மக்களாகும்!
சிதையால் நாட்டினைத் தலைவரின் பாதையில்
சென்றுமே காப்பவர் மக்களேயாம்!

மாரியைப் போன்றவர்......

சுதந்தர தீபத்தைத் தலைவர்கள் ஏற்றினுல்
சூழ்ந்ததைக் காப்பவர் மக்களேதாம்!
அதற்காக ஆவியும் தியாகமே செய்யுவோம்!
அனைவரும் ஒற்றுமை வேள்வி புரிகுவோம்!

மாரியைப் போன்றவர்......

CONFESSIONS OF A WRITER

[S. KRISHNAMOORTHY]

The writer I refer to is myself. These are my confessions. I visualise your raising of brows and your murmur – "A Writer ! Never heard this man's name! What sort of a writer is he ? What does he write?"

Well, I see you won't care to read what I am going to write until you are satisfied about my credentials as a writer. Here they are :

Frankly I cannot remember a time in my life when I was not writing. I cannot therefore say when I started writing. I would refer you to my parents who will testify that I started writing when I was barely a year old. Ofcourse they could not read nor understand what I wrote at that time; so they, as all grown-ups do when faced with things they don't understand, dismissed my writings as scribblings and scrawls. However, the fact remains that I started writing very early.

Since then I have been writing a great deal. In fact my job consists in writing, nothing but writing, day after day from ten in the morning to five in the evening. The volumes I have covered with my writings are legion. Even though modesty forbids it, in the interests of truth I am compelled to mention that in my office I have got the reputation of being an indefatigable penpusher. You don't consider this writing! Writing you consider only that in which imagination plays a part! Well, how do you think I write my weekly reports, monthly reports, quarterly and annual reports in my office? Can any imaginative piece of writing hold a candle to these reports of mine ?

You are still not convinced of my claim to be called a writer. Well, you are really hard to please! I don't accept defeat. I shall produce you proof that you dare not refuse to accept. Here is my p r o o f then……………neatly arranged in chronological order. Here is my file of rejection slips that I have received from editors who returned my contributions! You may count them, they are around hundred. They are the reward I have received for my hard labour of years. I hope you now agree I am a writer!

Let me tell you how I became a writer. From my college days I have been an arid reader of magazines. I liked the stories and articles appearing in them but felt I could do better. I thought I had a genius for writing. So I sat down to write, but found it was not so easy to write as I had thought. The thoughts and ideas I wanted to express proved nebulous and ethereal and eluded me like the will-o'-the-wisp. The words I managed to put on paper were too puerile to express what I had wanted to say. I gave up in despair.

But the craving to write did not wear off so easily. I made many fruitless attempts to write. Then I remembered that for a writer the mood is all-important. The writer has to deal with imagination, and imagination cannot just be ordered about. I decided to allow imagination to take possession of me and inspire me when it would. When so inspired, I would just be an instrument for imaginative spirit to express itself, and it would be a case of 'the moving finger writes, and having writ, moves on'.

Alas! in my case imagination did not appear eager to inspire me. My article remained unfinished for months together. I then decided not to give any more quarter to the 'mood-theory'. I braced myself to sit down and complete the article somehow at a single sitting.

I was not displeased with the result of my labours and despatched the article to a magazine which was my favourite. From the day I sent the manuscript I started having visions — visions of becoming a famous writer, of being mobbed by my admirers wherever I went and of being waited on my editors of magazines.……

I allowed a week to the editor t[o] whom I had sent my contributio[n] to be impressed by it, and the[n] waited impatiently for an enthusiasti[c] letter from him congratulating m[e] on my performance. I had no doub[t] that my contribution would take th[e] literary world by storm.

I waited and waited………At las[t] came...not the editor's letter I wa[s] waiting for, but the manuscrip[t] itself with the editor's rejection slip I could not believe my eyes ! I wa[s] shocked, to put it mildly. Coul[d] an editor be so dull-witted that h[e] coul not recognise a genius when h[e] saw one! The seals fell from my eyes, and the magazine which I had admired so long went down irretrievably in my estimation.

I sent my article to another magazine which too rejected it. The same thing happened with other magazines also. Finally I came to the frustrating conclusion that there is a nefarious conspiracy among our magazines to suppress genuine talents and there is very little prospect of my genius being recognised and encouraged.

Ofcourse I did not give up. After all hope never dies in human breast. I continued writing and sending my contributions to magazines and they continued to be returned with the disgusting regularity of a ball thrown against a wall. This is how I have collected so many rejection slips. Only recently I celebrated the receipt of the hundredth rejection.

There are, ofcourse, other ways of getting your writings into print. The easiest is to manage to marry the daughter of an editor, or better still, the daughter of the proprietor of a magazine! Then whatever you write is sure to be published. Another way is to take up a full time job in a magazine or newspaper. But this proceeding has its occupational hazards also; if the editor under whom you are employed is a busy person, he may require you to do some ghost writing for him and any refusal by you will cost you your job.

See on page 10

வைணவமும் வாழ்க்கையும்

[பேராசிரியர் அ. சீனிவாசராகவன்]

முன் ஒரு காலத்திலே முனிவர் ஒருவர் காட்டிலே தவம் புரிந்து, யோகத்தினுல் முகில் வண்ணனைத் தம் உள்ளத்துள்ளே கண்டு மகிழ்ந்திருந்தார். யோகம் கலைந்ததும் அவர் காட்டைவிட்டுப் புறப்பட்டார். அவருடைய சீடன் தன் குருவைத் தொடர்ந்து சென்றான்.

இருவரும் ஒரு நகரத்தின் புறச்சோலையை அடைந்தனர். அப்போது அந்நாட்டு அரசகுமாரன் தன் பரிவாரங்கள் புடை சூழ அங்கே தங்கியிருந்தான். பல ஏவலாளர்களும் பணிப் பெண்களும் தொண்டு செய்ய அவன் உண்டு உடுத்து விளையாடிக் களித்திருந்தான். வந்த முனிவரைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் அவனுக்கு நேரமில்லை. ஆகிலும் முனிவர் அவனை யணுகி, 'ராஜபுத்ர! சிரம் ஜீவ – நீடூழிவாழ்க' என்று ஆசீர்வதித்து அப்பால் சென்றார்.

அங்கிருந்து முனிவர் ஒரு நதிக்கரையை அடைந்தார். அங்கே ஒரு ரிஷி குமாரன் தன் புலன்களை ஒறுத்து மனதை யடக்கி வெற்பிடையே நின்று வெந்தவத்தீயில் வெந்து கடும்தவம் புரிந்துகொண்டிருந்தான். அவனைக்கண்ட முனிவர், 'ம்ரியஸ்வ ரிஷி புத்ரக! – ரிஷி புத்திரனே! நீ இறக்கலாம்' என்று கூறிக்கொண்டே நகர்ந்தார்.

சிறிதுதூரம், நடந்து சென்று, முனிவரும் சீடனும் ஒரு வேடுவர் குறிச்சியை யடைந்தனர். வேட மன்னனின் புதல்வன் ஒத்த பிராயத்தையுடைய சிறுவர்களுடன் வேட்டை நாய்களைப் பிடித்துச் சென்று பல ஆயுதங்களால் காட்டிலுள்ள மான் முதலான மிருகங்களைக் கொன்று விளையாடி வந்துகொண்டிருந்தான். சிஷ்யனுக்கு அவனைப் பார்க்கவும் பயமாயிருந்தது. முனிவரோ மன அமைதியுடன் அவனைநோக்கி, 'நம்ரியஸ்வ ந ஜீவத்வம்- வேடுவச் சிறுவனே! நீ இறக்கவும் வேண்டாம்; இறக்கவும் வேண்டாம்' என்று சொன்னார்.

மறுபடி தங்கள் வழியே சென்று அவ்விருவரும் ஒரு கிராமத்தை அடைந்தனர். கிராமத்தில் ஒரு அழகிய குடிசை. சுற்றிலும் மல்லிகை முல்லை முதலிய புஷ்பச் செடிகள் கொண்ட தோட்டடம். ஒரு புறம் பைந்துழாய்ச் செடிகள். ஒரு புறம் மரகத மணித்தடம் போன்ற ஒரு குளம். அதில் பசுமையான தாமரை இலைகளுக்கு நடுவே அலர்ந்த செந்தாமரை மலர்கள். அமைதியான சூழ்நிலையைக் கண்டு முனிவர் சற்று நின்றார். அச்சமயம் ஒரு வாலிபன் தன் இல்லாளுடன் அங்கே வந்து பூக்களையும் துளசியையும் பறித்து, மாலையாகத் தொடுத்தான். "பச்சைமாமலை போல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண் அச்சுதா அமரரேறே ஆயர் தம் கொழுந்தே" என்று இனிய குரலில் இசையுடன் பாடிக்கொண்டே தன் காரியங்களைச் செய்துகொண்டிருந்தான். தம் குடிசையில் எழுந்தருளியிருந்த அரங்கநாதன் அழகிய மணவாளனுக்கு மாலையைச் சாற்றி, பட்டாடை அணிவித்து அறுசுவை உண்டியைச் சமர்ப்பித்து.

"இருமாநிலம் முன் உண்டு மிழ்ந்த
செங்கோலத்த பவளவாய்ச்
செந்தாமரைக் கன் என்னம்மான்
பொங்கேய் புகழ்கள் வாயவாய்ப்
புலன்கொள் வடிவென் மனத்ததாய்
அங்கேய் மலர்கள் கையவாய்
வழிபட்டோட அருளுமே"

என்று மனமுருகிப் பாடினான். பிறகு பூஜையை முடித்துப் பகவத் பிரசாதமாக எல்லாவற்றையும் தானும் தமருமாக ஏற்று உளம் மகிழ்ந்திருந்தான். அவனையும் அவன் செயலையும் கண்ட முனிவர்' 'ஜீவ வா மா வா – ஐயா! நீ இருக்கவும் செய்யலாம் இறக்கவும் செய்யலாம் இஷ்டம்போல்' என்று கூறித் தம் வழியே செல்லலானார்.

இதை யெல்லாம் பார்த்துவந்த சிஷ்யனுக்கு வியப்பு மேலிட்டு, குருவிடம் வணக்கத்துடன், 'ஐயன்மீர்! தங்களைப் பின்பற்றி வருகிற நான் நால்வகை மனிதர்களைக் கண்டேன். அந்நால்வரையும் நோக்கி முறையே தாங்கள் கூறிய மொழிகளையும் கேட்டேன். அவை எவ்வாறு பொருத்த முள்ளவை என்று எனக்குத் தெரியவில்லை. கூறியருள வேண்டும்' என்று வேண்டினான்.

முனிவரும் புன்முறுவலுடன் விளக்கம் ஆரம்பித்தார் — 'முதலில் நாம் கண்டது அரசகுமாரனை யல்லவா!

சிலம்படி யுருவிற் கருநெடுங் கண்ணார்
திறத்தனாய், அறத்தையே மறந்து
புலம்படிந்து உண்ணும் போகமே பெருக்கிப்
பொழுது போக்குபவன்

அவன். இங்கே இருக்கும்நாள் அவனுக்கு இச்சிற்றின்பமே கிட்டும். இறந்தால் மறுமையில் பேரின்பத்துக்கு வகை செய்யாததால் அது கிட்டாது. ஆதலால் இருந்த நாள் சிற்றின்பத்தையாவது துய்க்கட்டும் என்று 'ராஜபுத்திர! நீடுழி வாழ்வாயாக' என்று அவனை ஆசீர்வதித்தேன்.

பிறகு நாம் ரிஷி குமாரனைப் பார்த்தோம். அவன் பரலோக சுகத்தை அடைவதற்கு வேண்டிய தவம் புரிவபனுதலால் மரணமானுல் அவக்கு வைகுந்தம் கிட்டும். இனியும் இவன்,

காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால்
நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவம் செய்ய

வேண்டாம். உடலைவிட்டுப் பேரின்பம் பெறட்டும் என்று 'ரிஷி புத்திர! நீ இ ரக்கலாம்' என்று கூறினேன்.

அதன் பின் கண்ட வேடுவச் சிறுவனோ,

கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து
திரிந்து நாயினத்தொடும் திளைத்திட்டு
ஓடியும் உழன்றும் உயிர்களைக் கொன்று
பாவமே செய்து பாவியாய்

நிற்பவன். இம்மையில் அவனுக்குச் சீரிய போகம் ஒன்றுமில்லை. குறிக்கோள் ஒன்றின்றிப் பல்லுயிரைக் கொல்வதால், இவனுல் பிறருக்கு ஒரு நன்மையும் இல்லை. அவன் இருந்தும் பயனில்லை, ஆதலால் 'நீ உயிர் துறக்கலாம்' எனறேன்; இறந்து பெறுவது நரக வேதனை

யாகையால், 'அவன் இறந்தும் பயனில்லை, என்று கருதி 'நீ இறக்கவும் வேண்டாம்' என்று மொழிந்தேன்.

நாம் கடைசியில் கண்ட மனிதனே,

பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக்
கண்ணனைப்
பயில இனிய நம்பாற் கடல் சேர்ந்த பரமனைப்
பயிலும் திருவுடையவர்.

காரியங்கள் நல்லன காணில் கண்ணனுக்கு என்று ஈரியாயிருப்பவன், கண்ணனுக்கு என்று பொருள் ஈட்டி, கண்ணனுக்கு என்று அறுசுவை அன்னம் பக்குவப்படுத்தி, கண்ணனுக்கே என்று அர்ப்பணித்து, கண்ணன் உண்ட அடிசில், அவன் சூடிய மலர் என்று எல்லாவற்றையும் ஏற்றுச் சுகமாக வாழ்பவன். அவன்

உடுத்துக் களைந்த பீதகவாடை யுடுத்துக்
கலத்தது உண்டு
தொடுத்த துழாய் மலர்சூடிக் களைந்தன
சூடும் தொண்டன்.

ஆகையால் இம்மையில் பல்கலனும் அணிந்து பட்டாடை உடுத்து, பாற்சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவார உண்டு சுகத்தோடு இருப்பவன். அவன் இறந்தால் நலமந்தமில்லதோர் நாட்டில் அலர் மேல் மங்கை யுறை மார்பனையும் ஆநந்தத்தையுமே பெறுகிறன். அவன் இங்கே இருப்பினும் இன்பம், இறப்பினும் இன்பம் ஆதலால் 'நீ உன் இஷ்டம் போல் செய்!' என்றேன்.

இச்சிறு கதை வைணவம் வாழ்க்கைக்கு எவ்வாறு முற்றிலும் பொருந்தும் என்பதைக் காட்டும்.

விஷ்ணுவை பரம்பொருளாகவும், அவனையடைவதற்கு அவன் கழலிணையே உபாயமாகவும் அறுதியிட்டுக் கூறும் சமயம் வைணவம். 'நாரணன் மூவேழுலகுக்கும் நாதன்' என்றும், அவன் 'நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்து' என்றும், 'ஒண்டொடியாள் திருமகளும் நீயே நிலாநிற்பக் கண்ட சதிர் கண்டு அடைந்தேன் உன் திருவடியே' என்றும், ஆழ்வார்கள் அனுபவித்துப் பாடிப் போந்த மதம் வைணவம்.

இவர்களுக்கு மூலப் பிரமாணம் வேதம். 'சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழால் அளித்த', 'மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ்தன்னையும் கூட்டி ஒன்றத் திரித்து' என்னும் அருளிச்செயல்கள் இவ்வுண்மையைப் புலப்படுத்துவன. ஆக,செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித், தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோம்.

அப்படி மறை நிலங்களிலிருந்து தெளிந்த வைணவமதத்தில், சேதனம், அசேதனம், ஈசுவரன் என்ற தத்துவம் மூன்று; பக்தி, சரணாகதி என்ற இரண்டும் உபாயம்; சர்வேசுவரனை அடைந்து அவனுக்குத் தொண்டுபுரிவதே உறுதிப்பொருள். ஒருவன் தத்துவத்தை உணர்ந்து, உபாயத்தை அநுட்டித்து, உறுதிப் பொருளைப் பெறவேண்டும். 'பரப்ரஹ்மம், பரமாத்மா' என்று உபநிடதங்கள் கூறும் ஸ்ரீமந்நாராயணனே ஈசுவரன் என்கிற பரதத்துவம். 'எவனுக்குப் பூமி சரீரமோ, எவனுக்கு ஆத்மா சரீரமோ, அவனே எல்லாவற்றுக்கும் ஆத்மா' என்று அந்தர்யாமிப் பிராமண்யத்தில் பரமாத்மா எல்லாவற்றுக்கும் ஆத்மா, சித்தும் அசித்தும் அவனுக்கு உடல் என்று கூறியதை நம்மாழ்வார் 'உடல் மிசை உயிர் எனக் கரந்து எங்குர் பரந்து உளன்' என்று அருளிச்செய்தார்.

இறைவனுக்கும் மற்றப் பொருள்களுக்கும் உள்ள இச்சம்பந்தம் 'சரீராத்ம பாவ சம்பந்தம்' எனப்படும். வைஷ்ணவ சமயத்தின் கொள்கைகளுள் இது மிகவும் முக்கியமானது. இந்த சரீராத்மபாவ ஸம்பந்தம் நன்கு உணரப்படுமாகில் மறுமையில் மட்டுமன்றி இம்மையிலும் சாந்தி நிலவும். நாடும் சமூகமும் முன்னேறும். தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையும் தரம்பெறும்.

இதைச் சற்றே விளக்குவோம்; நம் உடலை எடுத்துக்கொண்டால், ஆத்மா இருப்பதால் உடல் இருக்கிறது. சரீரம் இருப்பதாலேயே ஆத்மா அதை ஆச்ரயித்து இருந்து, காரியங்களைச் செய்ய வல்லதாகிறது. ஆத்மா இல்லாவிட்டால் சரீரம் நிற்காது; சரீரம் இராவிடில் ஆத்மா இயங்க முடியாது. இதையே ஆழ்வார் 'நான் உன்னை அன்றியிலேன் கண்டாய், நாரணனே நீ என்னையன்றியிலை' என்று நாரணனிடத்தும் கூறினர். மனித உடலுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள சம்பந்தம்

போன்றதே இறைவனுக்கும் சேதன
சேதனங்களுக்கும் உள்ள சம்பந்தம்.

இந்த சரீராத்ம பாவ சம்பந்தத்தை
சமய நிலையிலிருந்து, சமூகத்திற்கும்
நாட்டுக்கும் தனி மனிதனுக்கும்
கொண்டு செல்வோமானால், நாடும்
சமூகமும் முன்னேற வாய்ப்பு உண்டு.
ஒவ்வொரு தனி மனிதனும் தன்னைச்
சமூகத்துக்கு ஆத்மாவாகவும், சமூகத்
தைத் தன் சரீரத்துக்குத் துன்பத்தை
விலக்கி நன்மையைத் தேடிக் கொள்
வது போலவே, சமூகத்துக்கு நன்மை
யைத் தேடுவதிலேயே ஒவ்வொருவ
னும் ஈடுபடுவான். சமூகத்தையே தன்
நலமாகக் கருதுவான். இதுபோலவே
நாட்டைத் தன் உடலாகவும் தன்னை
அதன் ஆத்மாவாகவும், அறிந்த ஒரு
வன், நாட்டின் இன்பமே தன் இன்பம்
என்று உணர்ந்து, உடலின் துன்பத்
தைப் போக்க முயலுவான்; நாட்டுக்
கும் சமூகத்துக்கும் தொண்டுபுரியாத
மனிதன் உடலுக்கு ஊறுசெய்யும்
உன்மத்தன் போல அறிவிலியாகக்
கருதப்படுவான்.

இது மட்டுமன்றி, குடும்பத்திற்குப்
குடும்பத் தலைவனுக்கும் உள்ள
தொடர்பு சரீராத்மா பாவ சம்ப
தமே ஆசிரியனுக்கும் சீடனுக்கும்
கணவனுக்கும் மனைவிக்கும் இருப்பது
வும் இந்த சரீராத்ம பாவசம்பந்தப்
தான். முதலாளிக்கும் தொழிலாளிக்
கும், தலைவனுக்கும் தொண்டர்களுக்
கும் மேலதிகாரிக்கும் கீழதிகாரிக்கும்
இருக்கும் தொடர்பும் இத்தகையதே
இதை உணர்ந்தால் முதலாளி தன்
உடல் போன்ற தொழிலாளிக்குக்
குறை செய்யக் கருதமாட்டான்
தொழிலாளி தன் ஆத்மா போன்ற
முதலாளிக்கு ஊறு செய்ய நினையான்
குடும்பத்திலும் பள்ளியிலும், சமூகத்
திலும் நாட்டிலும் எங்கும் இன்பமு
நன்மையும் நிலவுமே யொழிய துன்ப
மும் தீமையும் இடம்பெறு. பிறர்க்கு
செய்யும் நன்மையும் தம் நன்மை
யாகவே ஆவதால், பிறநலம்பேண
அதனால் தன் நலத்தைப்பெற எல்லே
ரும் விரும்புவார்கள். சர்வ ஜகத்துக்
கும் ஆத்மாவான சர்வேச்வரனை ஆ
ரயித்துத் தன் நன்மையைக் கோரு
போது சமூகத்துக்கும் நன்மை
கோருவதாக முடிகிறது. சமூக
தைப் பேணுவது இறைவனு
டைய உடலைப் பேணுவதாகும்
இறைவனைப் பூசிப்பது ஆத்மாவை
பூசிப்பதாகும். இதுவே உபநிஷத்து
கள் உபதேசித்த விசிஷ்டாத்வை
சித்தாந்தம். இதுவே ஆழ்வார்க
காட்டிய வைணவ மதம். பாராசர
வியாஸர், வால்மிகி போன்ற ரிஷி
ளும், நாதமுனிகள், ராமானுஜர், தே
கர் போன்ற ஆசாரியார்களும் பரப்பி
சமயம். நிற்கின்றதெல்லாம் நெடுமால்
என்றிருப்பவன் வைஷ்ணவன்

உள்ளத்தின் வண்ணம்

[கவிஞர் இல. வாசுகிநாதன்]

★

அன்னையவள் வண்ணத்தை! அள்ளிச் செந்தேன்
அழகுதமிழ்க் கவிதையிலே அமைத்துச் சொன்ன
நன்னயத்தைச் சொன்னயத்தைப் பொருள் நலத்தை
நாவினிக்கத் தான்பாடிப் பாடி நின்றேன்!
கன்னலொத்த நுங்கவிதை ரசத்தை உண்டேன்
கற்பனையில் எனைமறந்தேன்! இருந்த போதும்
அன்ன நடைக் கவிபுனையும் அறிஞ! நின்பால்
அழுக்காறும் தான்கொண்டேன் குற்ற மாமோ? 1

பண்பொழியும் சக்தியவள் பவள வாயில்
பளிச்சென்று தோன்றுமொரு மின்னல் போன்ற
தண்ணொளியை வெண்ணிலவுக் கீந்த அந்தத்
தன்மையினால் நிலவரசி தலைமை உற்றாள்!
மண்ணுலகைப் பொன்னுலகாய் மாற்றிக் காட்டும்
மாண்பதுவும் சக்தியவள் ஆடல் என்றே
தண்ணமுதத் தனிக்கவிதை தந்த நின்றன்
தனித்திறமும் அவள்தந்த வண்ண மன்றோ! 2

மலராகிக் காயாகிக் கனியு மாகி
மன்னுயிர்கள் யாவினுக்கும் தாயு மாகிப்
புலமாகிப் பொழிலாகிப் புன்மை தீர்க்கும்
புத்தமுத மருந்தாகிப் புதுமை யாகி
நிலமாகி! நிழலாகித் தெளிந்து பாயும்
நீரோடை தானாகி! நிமிர்ந்த ஞானக்
குலம்வாழத் துணையாகும் சக்தி வண்ணக்
குழைவெல்லாம் வையத்தின் கோல மன்றோ? 3

'வாஸுதேவ: ஸர்வம் இதிஸ: மஹாத்மா ஸுதுர்லப:" என்று கண்ணன் கீதையிலும், "உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்று நம்மாழ்வாரும் வைணவன் நிலையையே கூறினர்,

இந்நிலையிலுள்ள வைணவன் தன் காலத்தையெல்லாம் 'வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது' என்றும் 'இருமுப்பொழுது ஏத்தி' என்றும் கூறியபடி, ஒவ்வொரு நாளையும் ஐந்து பிரிவாகப் பிரித்து காலை எழுந்தது முதல் இரவுபடுக்கப்போகும் வரையில் ஆத்மாக்களுக்கெல்லாம் ஆத்மாவான சர்வேச்வரனை பூசித்து நன்மை பெறுவதிலேயே செலவிடுவான். விடியற்காலையில் அபிகமநம் என்ற முதற்பிரிவில் தன்னையும் தன்னுடையவைகளையும் ஆட்கொண்டு உய்விக்குமாறு திருமாலை இறைஞ்சியும், இரண்டாவதான உபாதாநத்தில் இறைவனைப் பூசிக்கப் பொருள் ஈட்டியும், மூன்றாவதான இஜ்யா காலத்தில் ஈட்டிய பொருளைக் கொண்டு தன் சக்திக்கேற்றவாறு எம்பெருமானுக்குத் திருமஞ்சனம் நைவேத்யம் முதலியவற்றைச் செய்தும், இவனடியார்களை பூஜித்தும், நாலாவதான ஸ்வாத்யாய காலத்தில் ஸர்வேசுவரனுடைய ஸ்வரூப, குணரூபங்களைக்கூறும் வேதம் புராணம் முன்னோர்களின் அருளிச் செயல்கள் இவற்றைக் கேட்டும் படித்தும், கடைசி பிரிவான யோக காலத்தில் தான் கற்றுக் கேட்டு அறிந்த சர்வேசுவரனை நெஞ்சில் தியானித்துக்கொண்டே இரவில் படுக்கைக்குச் சென்றும் இவ்வாறு சங்கிலித் தொடர்போல நாள் முழுவதையும் எம்பெருமானுக்காகவே செலவிடுவான். 'இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே யாவோம். உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று ஆண்டாளும், 'உற்றேன் உகந்து பணி செய்து உன்பாதம் பெற்றேன்' 'ஈதேயின்னம் வேண்டுவது எந்தாய்' என்று நம்மாழ்வாரும் வைணவன் செயலைக் கூறினர்.

இவ்வாறு 'இங்கும் அங்கும் திருமாலன்றி இம்மை கண்ட' வைணவன் திருமாலை யாச்ரயித்து, தனக்கும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் இன்பத்துக்கே காரணமான வாழ்க்கையை நடத்தி, மனிதர்களின் போற்றுதலையும் இறைவனின் உகப்பையும் எய்தி, இம்மையில் இன்பத்துடன் இருந்து மறுமையில் பேரின்பம் பெறுகிறான்.

— மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் ஆலய கும்பாபிஷேக மலரிலிருந்து.

Continuation from page 7

The aspiring writer is faced with a vicious circle. The popular magazines won't publish his contributions unless he is a famous writer, and he cannot become a famous writer unless his writings are published!

A few days ago I set about calculating how much my writing adventure has cost me. The result was rather staggering—about fifty rupees on paper and two hundred repees on postage. I was foolish enough to mention this to my wife. You should have seen how she yelled and raved at my extravagance! I myself conceded her complaint about extravagance. After all, to pay two hundred and fifty rupees for hundred rejection slips (that works out to two and a half rupees for each rejection) is rather too much. At the same time I pleaded with her that I should give scope to my creative urge and satisfy my need for expression. My good woman agreed with me there, and she suggested a formula which would satisfy my urge to write and at the same time save the cost of postage. Her suggestion was that I may continue to write without let or hindrance; she won't grudge the expense on paper. But having written, I should not send the manuscript to a magazine but hand it over to her. For her part, she promised to read it once on condition that she would have absolute right in the disposal of the manuscript. I acquiesced in the arrangement because it assured me of atleast one reader for my writings, which is not a small thing.

I have not asked my wife what she does with my manuscripts, but I think I know where they go. Only the other day I overheard my wife telling her neighbour that she has found a good substitute for firewood. As a matter of fact, our fire-wood bill has come down considerably.

அக்மார்க் முத்திரையிட்ட பொருள்களை ஏன் வாங்க வேண்டும்?

பொருள்களின் சுத்தத்திற்கும் தரத்திற்கும் உத்தரவாதம் அளிப்பது அக்மார்க் முத்திரை. நெய், எண்ணெய், முட்டைகள் தேன் போன்ற பொருள்களின் மீது, ஆய்வறை விஞ்ஞான ரீதியில் பரிசோதனை செய்தபின். அரசாங்கம் இந்த முத்திரையை இடுகிறது. ■ அக்மார்க் முத்திரையிட்ட பொருள்களை நீங்கள் வாங்கினால், விஞ்ஞான முறையில் நன்கு பரிசோதனை செய்யப்பட்டு தரத்திற்கும் சுத்தத்திற்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பொருள்கள் உங்களுக்கு கிடைக்கின்றன.



அக்மார்க்
தரத்தின்
சின்னம்

davp 67/375

On the occasion of Maxim Gorky's Birth Centenary March 28, 1968.

Landmarks in the Life of Gorky

Maxim Gorky who rose from humble beginnings into the eminence of an international writer, led a very colourful and eventful life. Born of the people, he lived in their midst, wrote about them and championed their cause.

Gorky's writings represent an impressive chronicle of modern Russian history. His personal history reflects the intellectual growth of the Russian working class.

He was born into a proletarian family of Maxim Savvatievich on March 28, 1868, at Nizhni Novgorod (now Gorky), on the banks of the Volga. While still a child of 7, he was orphaned. He began to work for his living even when he was just 9 years old. Unable to stand the cruelty of his relatives with whom he was staying, he ran away from them when at 12.

In 1884 the sixteen year old apprentice avid for learning set out for the town of Kazan in the hope of entering the university there.

But life had prepared other universities for him. Living in the dingy basement of Semyonov's bakery at Kasan as a 'stepson of society' he made a study of workmen, vagrants and slumdwellers. At the same time he came into contact with a group of intellectuals who were holding political study-circles. It was here he came to learn the basic tenets of Marxism. He read books on philosophy and political economy. His life at Kazan was an important landmark in his life. It supplied him abundant material for his future writings.

The next important landmark was his life at Tiflis. In 1891 he set out roaming his native land and after tramping through the Ukraine, Bessarabia, the Crimea and the Caucasian Sea-coast, doing any odd job to earn a meal, he arrived at Tiflis where he got a job in the railway repair workshop. Here again he joined a workers' revolutionary circle and came into close contact with Marxists. This determined the course his intellectual searchings were to take from then on.

His first short story "Makar Chudra" was published in the Tiflis newspaper *Kavkaz* in September 1892 It was signed by the pseudonym "Maxim Gorky" under which the author wrote ever after; his real name was Alexei Peshkov

This was the beginning of Gorky's literary career. On returning to Nizhni-Novgorod. under the patronage of the progressive Russian writer Korolenko, his another story "Chelkash" was puplished in one of the popular magazines.

He also began contributing short stories, feature articles and biting satirical pieces to big Volga newspapers *Nizhegorodsky Listok* and *Samarskaya Gazeta*.

The year 1898 was momentous for Gorky. His first colletion of short stories and articles was published.

His stories "Chelkash" (1894), "One Autumn Night" (1894) and "Old Woman Izergil" come under the 1st period of his writings which are characterised by romantic lyricism, born out of the 'delightful blindness brought about by looking at life through the prism of books.'

'The Lower Depths' (1902), "Smug Citizens" (1902) and Summer folk" (1905) come under the second period which are realistic portrayals of life as seen by a humanist.

"Childhood" (1913), "Reminiscences of Tolstory" (1919) "Reminiscences from my youth" (1923) and "Recolletions" (1925) form the third period of his writings marked by maturity of thought and expression.

Another important landmark in his life was his participation in the abortive revolution of 1905.

After that he had to take flight to Western Europe, to Germany and then to America, where he remained till 1913. His famous novel 'Mother' was published in 1907.

The following particulars regarding the ownership of the "EZHUTHALAN" (எழுத்தாளன்) the monthly newspaper are published as called for by rule 8 of the Registration of newspapers (Central) Rules, 1956.

FORM IV.

1. Place of Publication:	Tiruchirapalli.
2. Periodicity of Publication:	Monthly.
3. Printer's Name, Nationality & Address	A. V. R. Krishnaswamy, Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirapalli-2
4. Publisher's Name, Nationality & Address	Do.
5. Editor's Name, Nationality & Address	Do.
6. Name and address of individuals who own the News paper and partners of share holders holding more than one percent of total capital	A. V. R. Krishnaswamy, Kannan Press, 24, Theradi Bazaar Tiruchirapalli-2.

I, A. V. R. Krishnaswamy, herby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated 15—3—68.

A. V. R. KRISHNASWAMY,
Signature of Publisher.

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2.